IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

M.C.O.P.No. 40/2021

Deposition of RW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 13.06.2025.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | ரமேஷ்பாபு | **Caste** | : | |
| **S/o** | **:** | | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை**

நான் மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் நீதிமன்றத்தில் இருந்து அழைபபாணை வரப்பெற்றதன் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். வட்டார போக்குவரத்து அலுவலர் மேட்டூர் அவர்களால் வழங்கப்பட்ட அறிக்கை தாக்கல் செய்கிறேன் அது **எ.ம.சா.ஆ.**1 ஆக ககுறியீடு செய்யப்படுகிறது. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்த TN 93 B 2129 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 52 T 2196 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி எ.ம.சா.ஆ. 2 மற்றும் எ.ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளில் மேற்படி இருசக்கர வாகனங்களை ஓட்டிய நபர்களுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு குறித்து எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி விபத்து சமயத்தில் மேற்படி TN 93 B 2129 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்திற்கு முறையாக காப்பீடு இருந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி TN 93 B 2129 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற மனுதாரருக்கு மேற்படி விபத்து சமயத்தில் ஓட்டுநர்

உரிமம் இருந்தது என்றாலும் அதை தொலைத்துவிட்டார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்/–ரமேஷ்பாபு

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–A.சண்முகப்பிரியா,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.